# காஞ்சி

அண்ணாதுரை



விலை 20 காசு

24-9-67

## நாகரிகம் என்பது எழிலைச் சித்திரிப்பதானால் சரி...... இழிவைச் சித்திரிப்பதானால்......?

# புதுமலர்

—[ கஸ்தூரி நடராசன் ]—

அவள் சிற்றிடை ஏந்தி, சிறுநடை பயின்று, சிங்காரப் பார்வை பார்த்து ஒயிலாக நடந்து அலுவலகத்திற்குச் செல்லும் விதமே அந்த செஞ்சிவாழ் இளம் உள்ளங்களை ஆட்டுவிக்கும். ஆட்டுவித்தால் ஆடாதார் யார்? புதுமலரான அவள் ஒரு புதுமலரே. செஞ்சியில் உள்ள வருவாய்த் துறை அலுவலகத்தில் ஒரு சாதாரண எழுத்தராகப் பொறுப்பேற்று முழுமையாக இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் அந்தப் புதுமலரைத் தேடி வந்த புகழுரைகள் எத்தனையோ! "சித்திரைப் பெருநிலவாக இந்தத் தரணிமீது தளிர்நடைபோடும் உன் பாதங்களுக்கு எத்தனைப் பொன்மலர்கள், வேண்டுமானாலும் அர்ப்பணிக்கத் தயார்! உன் கனிவான பார்வையை ஒரே ஒரு முறை என்பக்கம் திருப்பு" என்று சொல்லிக்கொண்டு வந்த வாலிப உள்ளங்கள்தான் எத்தனை! எத்தனை!!

அந்த ஊரின் ஒருபுறமான கிருஷ்ணாபுரம்தெருவில் அவள் ஒரு பெரியவரின் அடைக்கலமாக்கப்பட்டாள். அவளை அழைத்துக்கொண்டு அப்போது அவளின் அத்தை வந்தாள். சொந்த ஊர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கோபால சமுத்திரமாம். அந்தப் புதுமலர் நீண்ட நாட்களுக்கு முன்பே தாயையும், சென்ற வருடத்தில் தந்தையையும் இழந்தவளாம். அடக்கத்துடன் தன் சகோதரரின் மகள் இருக்க வேண்டுமென்று விரும்பினாள் அத்தை. அவளின் ஒரே மகன் திருநெல்வேலி அரசாங்க மருத்துவமனையில் ஒரு குமாஸ்தா. அவனைப் பார்த்துக்கொள்ள அத்தை நிச்சயமாக கோபால சமுத்திரத்திலேயேஇருக்க வேண்டியதாயிற்று. ஆகவேதான் புதுமலர், செஞ்சியிலுள்ள பெரிய தனக்காரரான மெய்யப்பச் செட்டியாரின் அடைக்கலப் பொருளாக்கப்படவேண்டிய கட்டத்துக்குள்ளாக்கப்பட்டாள்.

காலையில் எழுந்ததும் புதுமல தன் பேச்சுக்களால் அந்த வீட்டையே புதுமணத்தில் ஆழ்த்துவாள். அந்த வீட்டுக்கார மெய்யப்பச் செட்டியாரின் நடுத்தர வயதுடைய மனைவி பொன்னம்மாள், புதுமலரின் முகம் வாடாமல் பார்த்துக்கொள்வாள். தன் மகள் இறந்து போன சோகத்திலிருந்த பொன்னம்மாளுக்கு புதுமலரின் வருகை சற்று திருப்தி அளித்தது.

'என்னம்மா? என்ன வேலை செய்ய வேண்டு"மென்று தன் பொன்னான வாய்திறந்து புதுமலர் ஒரு வார்த்தை கேட்டால்போதும்.

"போதும்மா, உனக்கு ஆபீசுக்குப் போனால் நிரம்ப வேலை இருக்கும். அந்த வேலையைக் கவனி. இந்த வேலை எல்லாம் உன் புருஷன் வீட்டுக்குப்போனால் செய்துகொள்வாய்" என்பாள்.

"இல்லையம்மா, இப்போது கற்றுக்கொண்டால் தானேம்மா என் கணவன் ;வீட்டில் வேலைகளைக் கவனிக்க முடியும்" என்பாள் புதுமலர்.

'பரவாயில்லையே, கூச்சமில்லாமல் பேசுகிறாளே, நல்லப் பெண். மனம்விட்டுப் பேசுகிறாளே' என நினைத்துக்கொள்வாள். இருப்பினும் அவள் அலுவலகத்திற்குப் போகும்போது தலைகுனியாமல் நிமிர்ந்து நடந்துகொண்டுபோவாள். அதுஅந்தப் புதுமலரிடம் அமைந்த குறை என்றுபொன்னம்மாள் கருதினாள்.

"அது சரி புதுமலர், நீ ஆபீசுக்குப் போகும்போது தலைகுனிந்து கொண்டு போம்மா. நீ வயசுவந்தப் பொண்ணு ரோட்டிலே இதுமாதிரி போனா நாலுபேரு நாலுவிதமா பேசுவாங்க. ஆகவேதான் சொல்றேன்" என்று ஒரு நாள் புதுமலர் அலுவலகத்திற்குப் புறப்படும்முன்பு சொல்லிவிட்டாள் பொன்னம்மாள்.

'என்னம்மா இந்த உலகத்தைக் கண்டா பயப்படுவது? தலைகுனிந்து கொண்டு போனால் இந்தப் பொல்லாத உலகம் செய்யும் அக்கிரமங்களைக் காணவே முடியாது. பெண்கள் தலைகுனிந்து போவதினால் மட்டும் தங்களை உயர்ந்தவர்களாக்கிக் கொள்ளமுடியாது. எண்ணத்திலே தூய்மை, பேச்சிலே கனிவு, செயலிலே நேர்மை இருந்தால் போதும்மா, இந்த உலகம் நல்லதையும் சொல்லும் பொல்லதையும் சொல்லும். இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால் பிழைக்கக்கூட முடியாது" என்றாள்.

'ஆமாம் அன்றைக்கு ராஜா மலைக்குப் போன போது வழியில் யாரோ ஒரு வாலிபனிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாயாமே?' பொன்னமாள் புதுமலரை அன்புடன் கடிந்தாள்.

"இல்லேம்மா அவர் எங்க ஆபீஸ் கிளார்க்கு. அவர்எப்போதும் என்னைக் கேட்டுக் கொண்டே இருப்பார், அவர் எண்ணம் தவறானதுன்னு எனக்குத் தெரியும். இருந்தாலும், அவர் இப்படி நடந்து கொள்ளக்கூடாதுதான். அவரும் எத்தனையோ வழிகளில் என்னை கவனித்துக் கொண்டிருந்தார். அதே எண்ணத்தில்தான் அவரும் பேசிக் கொண்டு வந்தார். நானும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தான் பதில் சொல்லி வருகிறேன். அடிக்கடி ஆபீசில் இது இல்லை அது இல்லை. அது வேண்டும். இது வேண்டும்னு குழைந்தபடி வருவார். நான் அவர் கேட்பதைக் கொடுத்து விட்டு சும்மா தொந்தரவு செய்யாதீர்கள் என்று ஒரு நாள் சொல்லி விட்டேன். அதற்கப்புறம்தான் அன்று ராஜா மலைக்குப் போன போது என்னிடம் பேசினார். நானும்......துணிந்துதான் அவர் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னேன்" என்றாள்.

"பரவாயில்லையே சாமார்த்தியமாகப் பேசுகிறாள்—என நினைத்து, பொன்னம்மாள் மனம் குளிர்ந்தாள்.

"அம்மா. இன்னிக்கு ஆபீஸ்லே ஒரு பார்ட்டி, ராத்திரி ஏழு மணி

( 4-ம் பக்கம் பார்க்க )

**முகப்பில்:**

தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு, சி. பழனி—ஓமலூர்

திரு. அ. துரைசாமி—திருப்பூர்

திரு. பி. பெரியசாமி—ராசிபுரம்

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10 ஆறுமாதம் ரூ 5

மலர் 4 24—9—67 இதழ் 9

# அராஜகத்தை அடக்குக!

கடந்த இருபது ஆண்டுக் காலத்தில் அராஜகத் தன்மையை, எந்த அளவுக்குத் தங்கள் இதயத்தில் வளர்த்து, வளர்ந்து வந்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதனை, கடந்த 6 மாத காலத்துக் காங்கிரசின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருவோர் நன்கு புரிந்துகொள்ள முடியும்!

தில்லையாடி வள்ளியம்மை என்ற ஒரு தமிழ்த் தாயின் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றப்பட்ட காந்தியடிகளின் தலைமையின்கீழ், நாட்டின் மிடிமைத் தன்மைக்கு 'விடிவு' தேடிக் கொடுத்த ஒரு இயக்கம், வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு கண்ணெனக் காத்து வரவேண்டிய நிலையை எய்தவேண்டி யிருக்க, மாறாக, பொதுநல நோக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, சுயநல வெறித்தன்மைக்கும் குறுகிய புத்தியின் செயற்பாட்டுக்கும் இடங் கொடுத்து. தன் புனிதத் தன்மைக்குப் புதை குழி தோண்டுகிறது என்ற இரங்கத்த வரலாற்றை இந்தியத் துணைக் கண்டம் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பது, இந்திய மக்களுக்கு இன்னமும் முழு 'விடிவு' ஏற்பட்டுவிடவில்லை என்பதை மெய்ப்பிப்பதாகத்தான் இருக்கிறது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர், துணைக் கண்டத்தில் மலர்ந்திருக்கும் மறுமலர்ச்சியினை, பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டு, மக்களின் தீர்ப்புக்குத் தலை வணங்க வேண்டியதை விட்டு விட்டு, ஜனநாயக மறுமலர்ச்சியையே 'கொலை செய்ய'த் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு செயல்பட்டு வரும் வேதனை மிக்க செய்திகளை, அன்றாட செய்தி இதழ்கள் நாள்தோறும் சுமந்துகொண்டு வருவதனை மனவருத்தத்தோடும், கலக்கத்தோடும் சந்திக்கவேண்டி யேற்பட்டு விட்டிருக்கிறது.

எதிர்க் கட்சி அமைச்சரவையில் உள்ளவர்களையும், அத்தகு கட்சி உறுப்பினர்களையும் தம் கட்சிக்கு இழுப்பதன் மூலமும், ஏதுமறியாத மக்களைக் கூட்டி இல்லாதனவற்றை எடுத்துப் பேசி பொல்லாப்பு ஊட்டி —திசை திருப்பிவிட்டு, முழக்கங்களை முழங்கச் செய்து குழப்பங்கள் மூட்டி—அந்தப் பகுதியின் அமைதிக்குப் பங்கம் ஏற்படச் செய்தும் அமைச்சரவைகளைக் கவிழ்க்கும் ஏற்பாடுகளை முன்நின்று நடத்திவைத்தும் இவை போன்ற கேடான வழிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வரத் தலைப்பட்டிருக்கின்றனர், காங்கிரசுக்காரர்கள்.

தமிழகத்தின் கதை, இதைவிட இன்னும் பல படிகள் மேலே போய் எங்கோ ஒருவர், எதற்கோ, யாராலோ வெட்டப்பட்டதற்கும், சமூகப் பிணக்குகள் காரணமாக எங்கோ எவரோ தாக்கப்பட்டதற்கும், நாட்டில் சட்டம்—அமைதி—ஒழுங்கு கெட்டுப் போய் விட்டதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி வைத்துக் கொண்டு, அதன் மூலபலத்தோடு, நாட்டில் அராஜக நிலையை அவர்கள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் புதிய புதிய முறையில், புதிய புதிய கோணத்தில் உண்டாக்கி வருகிறார்கள்.

இந்தக் காங்கிரசுக்காரர்கள் நாடாளும் நாயகர்களாய் இருந்த காலத்தில் எதிர்க் கட்சிகளாயிருந்த நாமும், பிற கட்சியினரும் காங்கிரசு வெறியர்களால் தாக்கப்பட்டும், வெட்டப்பட்டும் மானபங்கப்படுத்தப் பட்டும் உள்ள நிகழ்ச்சிகள் ஏராளம், ஏராளம். நீதி கேட்டு நின்றதற்குக் குண்டடிபட்ட வரலாறுகளும் உண்டு.

கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட கடந்த 6 மாத காலத்தில், காங்கிரசார் ஆடி முடித்த ஆட்டங்களை வடித்துக் காட்டவும், எண்ணிப் பார்க்கவும் குலை நடுக்க மெடுக்கின்ற அளவுக்கு இருக்கிறது.

அப்படி இருக்க, சென்னையை அடுத்த நெட்டுக் குப்பத்தில், கடந்த கிழமை ஏற்பட்ட கலவரத்துக்கு முற்றிலும் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டிய காங்கிரஸ், தன் ஏடு மூலமும், எழுத்தாளர்கள் மூலமும் பிரச்னையை திசை திருப்பிவிட்டு, புனித முத்திரை குத்திக்கொள்ள அரும்பாடு படுகிறது!

கடந்த 1958–ம் ஆண்டு முதலே அந்தக் குப்பத்தில் காங்கிரஸ் குண்டர்களால் கழகத் தோழர்கள் தாக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். தயங்கித் தயங்கி ஏற்றி வைத்த கழகக் கொடிக்கம்பங்கள் ஈவிரக்க மற்ற முறையில் வெட்டிச் சாய்க்கப் பெற்று வந்துள்ளன. கழகத் தலைவர்களது படங்கள் நொறுங்கி இருக்கின்றன காங்கிரஸ் வெறித்தனத்தால்.

கடந்த ஆண்டில்கூட, திரு. பக்தவத்சலனார் முதலமைச்சராயிருந்த நேரத்திலே இங்கு கழகத் தோழர்கள் காங்கிரஸ் குண்டர்களால் தாக்கப்பட்டு 30 பேருக்கும் மேல் காயம்பட்ட செய்தியினை இதழ்கள் நாட்டுக்கு அறிவித்துள்ளன.

உண்மை இவ்வாறு இருக்க, அமைதியே மனித உருவாய் வந்து பிறந்த பேரறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளைக் கொண்டாட—அதுவும் முதன் முதலாக என்பது குறிப்பிடத்தக்கது—முடிவெடுத்துச் செயல்பட்ட தோழர்களின் செந்நெறி கண்டு சீற்றம்கொண்டோர் அதனைச் சிதைக்கத் திட்டமிட்டு செயல்பட்டிருக்கிறார்கள். குலஆசாரப்படி, போர்க்களம் புகுவோர்போல செங்கொடி யேந்தி வந்திருக்கிறார்கள் என்பதொன்றே —அது காங்கிரசுக்காரர்களால் திட்டமிடப்பட்ட வெறித்தனம் என்பதற்குச் சான்றாகும்.

நெட்டுக்குப்பம் நிகழ்ச்சிக்குக் காரணம் எதுவாயிருந்தாலும், அது வளர்ந்து வரும் மனித நாகரிகத்துக்கு எருவாக இருக்க முடியாது. வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

ஒரு நெட்டுக் கும்பம் அல்ல—இனி தமிழகம் காங்கிரசின் அராஜகப் போக்கால் பலப்பலவற்றைச் சந்திக்க வேண்டி இருக்குமோ என்ற அச்சமே ஏற்படுகிறது.

இந்த அச்சத்தை, தொடக்கக் கட்டத்திலேயே போக்கும் நடவடிக்கையாக, இக் குழப்பத்துக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்களை மக்கள்முன் நன்கு அறிமுகம் செய்து வைக்கவும், தக்க தண்டனை தரவும் வேண்டியது தமிழக அரசின் தலையாய கடமை என்பதை வலியுறுத்திக் கொள்ளுகிறோம்,

2-ம் பக்கத் தொடர்ச்சி

யாகும் நான் வர. பயப்படமல் இருங்க வந்துவிடுகிறேன்'' என்று சொல்லி அன்று அலுவலகத்திற்குப் புறப்பட்டாள்.

''நான் வரேம்மா, உன்னை அழைத்துக் கொண்டுவர'' என்ற மெய்யப்பச் செட்டியாரின் குரல் கேட்டு கடகடவென சிரித்துவிட்டாள் புதுமலர்.

''நான் என்ன சின்னப்பிள்ளையா எனக்குத் துணைவர? இந்த ஏழு மணிக்கு வரக் கூடிய தைரியம் பத்தொன்பது வயது வந்த எனக்குக் கிடையாதா? நல்லா இருக்குது. நீங்கள் வரவேண்டாம்......நானே வந்துவிடுறேன்'' என்று முடித்துப் புறப்பட்டாள்.

''உலகம் தெரியாத...பொண்ணு மெய்யப்பச்செட்டியார் அலுத்துக் கொண்டார்.

அவள் அந்த ஊருக்கு வந்து மூன்றே மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் அவளை அறியாதவர்கள் அந்த ஊரில் இல்லை என்று சொல்லலாம். அலுவலகம் விட்டு வீட்டுக்கு வரும் போது யார் வந்து பேச்சுக் கொடுத்தாலும் சிரித்த முகத்துடன் பேசுவாள். மனம் விட்டுப் பழகுவாள். அவளின் சக குமாஸ்தா அறைகளுக்கும் சரளமாய் போய் வருவாள். ஏன், அந்த கோபால் அவளை அடிக்கடி தொந்தரவு செய்வானே அவனின் வீட்டுக்குக்கூட மூன்று முறை போய் பேசிவிட்டு வந்திருக்கின்ருள். புதுமலரின் வீடு எங்கே என்று அந்த கூட்ரோட்டிலிருந்து யாராவது கேட்டால் போதும், உடனே கிருஷ்ணபுரம் தெருவைக் காண்பித்துவிடுவார்கள். அந்த அளவுக்கு அவள் பெயர், ஊர் அறிந்த ஒன்ருகிவிட்டது.

அப்படி என்னதான் அவளிடம் ஒரு மவுசு? வேறென்றுமில்லை. அவள்பெயருக்கேற்ப ஒருபுதுமலரே. நேர்மையானவள் திருமணம் செய்து கொடுக்க அவள் அத்தைதான் முன் வர வேண்டும். அந்த ஒரு புது மலரைத் தேடி யார்வரப் போகிருர்கள். அது ஏழை வீட்டுத் தோட்டத்திலே பூத்த ஏழை மலர். அது தான் தடை. அதிலும் புதுமலர் காவலற்ற மலர். வாலிப உள்ளங்களின் இனம் தெரியாத உணர்வைத் தூண்டுகின்ற பாசமலர் அவள். தோட்டத்து மலராய் இருக்க வேண்டிய அந்த மலர்—வேலிகளுக்கிடையேயிருந்து விலை போக வேண்டிய அந்த மலர் வீதி, வழியே போவோர் வருவோர் கண்களைக் கவருகின்ற வகையில் பூத்துப் பொலிவுடன் புதமணம் பரப்பிக் கொண்டிருக்கலாமா? மலர்தானே வண்ணமலர்; வாசமலர்; வேலியில்லா மலர்; கைக்கெட்டிய தூரத்

(15-ம் பக்கம் பார்க்க)


காஞ்சி

அறிஞர் அண்ணா
அவர்களின்
கவின் படைப்புகள் பலவோடு,
கதை, கட்டுரை, கவிதைகள் மிளிர
முன்னணித் தலைவர்கள் பலரும்
எழுதும்
முத்துக் குவியலாய்,
முல்லைச் சோலையாய்
தயாராகிறது!

3-ம் ஆண்டு மலர்!


## மறைவு

சென்னை 26-வது வட்ட முன்னுள் மாநகராட்சி உறுப்பினரும் கழகத் தோழரும், பல்வேறு பொது அமைப்புகளில் தொடர்பு கொண்டவரும், கௌரவ மாஜிஸ்திரேட்டாகப் பணியாற்றி வந்தவருமான திரு. சி. ஆர். பாலசுந்தரம் இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் அறிவித்துக்கொள்கிருேம்.

தோழர் பாலசுந்தரம் அவர்களைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—ஆசிரியர்

# சேலம்-இல்லையாம்!

— பழநி —

**அன்புள்ள நண்பா!**

இதயத் தடத்தின் அடி மட்டத்தில் உறங்கிக் கொண்டிருக்கின்ற சொற்கூட்டங்களை ஒழுங்குபடுத்தி, ஆற்றொழுக்காகப் பேசி கருத்துக்களை எடுத்துச் சொல்லுதல் என்பது மேடைப் பேச்சில் சிறந்த ஒரு கலை அம்சமாகும்!

அதைப்போலவே, சிதறிக்கிடக்கின்ற எழுத்துக்களை நிரல்படக் கோத்து தெளிந்த, திட்டவட்டமான கருத்துக்களை ஆணித்தரமாக எழுதி எடுத்துக்காட்டுவதென்பதும், எழுத்துத் துறையில் ஈடுபட்டிருப்போருக்கு இன்றியமையாததொரு அம்சமாகும்!

பலதரப்பட்ட சுவை வேறுபாட்டில் உலக மக்கள் மூழ்கித் திளைத்திருக்கின்ற மாட்சியினை ' லோகோ பின்ன ருசி'' என்ற தெலுங்குப் பழமொழி எடுத்துக்காட்டும்!

''உலகம் பலவிதம்'' — என்ற தமிழ் வழக்கு இதனை மெய்ப்பிப்பதாகும்,

உலகத்து மக்கள் அத்தனைப் பேருடைய கண்களது தன்மையும் ஒரே தன்மையதுதான் — அதாவது பார்க்கின்ற செயலில். கண்களைப் பொறுத்த வரையில், அது தன் கடமையைச் சீராகச் செய்துகொண்டு வருகிற வரைக்கும் — ''எடுத்துக்காட்டும்'' இயல்பை அது பெற்றிருக்கத்தான் செய்கிறது; பொதுவாக! உலக மாந்தர் அத்தனைப்பேருக்கும்!

கண்களின் துணைகொண்டு காண்கின்ற மனிதனின் மனத்திட்பத்தின் மென்மையான அல்லது தடித்த இயல்பிற்கு ஏற்ப — கண்டவை பற்றிய எண்ணத்தில்— முடிவில் — கருத்தில் வேறுபாடுகள் தோன்றக்கூடும். அவை கருத்து மாறுபாடு' என்றழைக்கத்தக்கனவாகவும் ஆதல் இயற்கைதான்!

ஆனால் கண்டது என்னவோ ஒரே பொருளைத்தான்! அவைபற்றிய கருத்துரைகள்தான் பலப்பல!

இந்த எடுத்துக்காட்டு, 'காட்சி'பற்றிய எல்லா உவமேயங்களுக்குமே பொருந்துவதாகும்.

ஒரு எழுத்தாளனால், அவன் கற்ற — கண்ட அளவின் இயல்பிற்கு ஏற்ப — தெளிந்த தீர்வினை நிர்ணயித்துக் காட்டுகிற அறிவுச் செறிவை வளர்த்துக்கொண்டிருக்கிற முறைமைக்கு ஒப்ப-எந்த ஒன்றையும் படைத்துக்காட்ட முடியும்!

காதல் மனையாளின் கூந்தலை வருடிவிட்டு, கொடுக்கின்ற இன்பத்தைக்கொள்ளுகின்ற முறைமையினை, சிருங்கார ரசம் சிந்தையைக் கிளர்த்துகிற முறையில் படைத்துக் காட்டவும் முடியும்!

அதே கருவை, எழுத்துக்களின் முறைமாற்றத்தால், அந்த இன்பத்தைக் கொள்ளுகின்ற தன்மையால் பெறப்போகின்ற இடர்ப்பாட்டின் அளவைச் சுட்டிக் காட்டி—சிந்தையை சிந்தனையைத் திசை திருப்பிவிடவும் முடியும்.

கண்களும், கண்களும் பேசிக்கொள்ளுகின்ற நயத்தைக் காவிய முறையிலும் வடித்துக்காட்ட ஒல்லும்; கைக்கின்ற படியும் படைத்திட முடியும்.

காதல் என்ற தத்துவத்தை ஆக்கத்திறனில் ஈர்த்துவிடவும் எழுத்தாற்றலால் இயைந்த ஒன்றுதான்! அழிவுத் திசையில் இழுத்துவிடவும் எழுத்தாற்றலுக்கு இயைந்ததுதான்!

அவைகளைப் போலவேதான், எழுதுவதற்கு எடுத்துக்கொள்கின்ற எந்த ஒரு கருப்பொருளையும், இதயத் தெளிவின் தன்மைக்கு இயைய எப்படி எப்படிவேண்டுமானாலும் இழுத்துச் செல்லமுடியும் திசை திருப்பிவிடவும் முடியும் என்பதைப்போலவே, படைக்கப்பட்டவைகளை, படைப்பின் கருவை, நடையை, முறையை ரசனைத் தன்மையின் இயல்பிற்கு ஏற்ப மாறுபட்ட 'சுவை'களையும் உண்டாக்கிக் களிக்கவோ, கைப்பினைக் காட்டவோகூட முடியும்.

பேச்சாற்றலுக்கும் இந்த விளக்கம் முழுக்கமுழுக்கப் பொருந்தும். அதனைச் சுவைத்துப் பெருகின்ற கருத்துக்கும் பொருந்தும்!

இந்தியத் துணைக்கண்டம் அடிமைப்பட்ட பின்னர்—நாம் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதை அறிவாளர்கள் உணரத் தொடங்கிய பின்னர் இந்தியத் துணைக்கண்டத்தில் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் 'பல்கி' இருக்கிறது என்பதில் ஐயமில்லை!

வடபுலத்தைப் பொறுத்த மட்டில், காளிதாசரின் சாகுந்தலமும் வால்மீகியாரின் இராமாயணமும், கற்பனை வளத்தின் எடுத்துக்காட்டுக்கும் எழுத்தாற்றலின் சிறப்பும் பண்டைய நாள் எண்ண—எழுச்சிகளும் எப்படி எப்படி இருந்தன — இயங்கின என்பதற்கும் சீரிய உவமைகளாகும்.

தென் திசைக்கு சங்க இலக்கியங்களும், இதிகாசங்களும், கீழ்க்கணக்கு, மேல் கணக்கு நூல்களும் எண்ணத்தை — எழுச்சியினை எடுத்துக்காட்டவும் ஆற்றலினைப் புலப்படுத்திக் காட்டவும் தக்க சான்றுகளாகும்.

ஆனால் நண்பா! அந்த நாள் எண்ண எழுச்சிகளும், சிந்தனை முறைகளும், ஆற்றலின்—வன்மையின் அளவுகளும் இன்று எவ்வளவோ மாறுபாடு கொண்டிருக்கின்றன.

நேற்றைய சிந்தனை இன்றைக்கு இல்லை; இன்றைய ஆற்றல் நாளைக்கு இருக்குமோ என்னவோ!

இந்தக் கட்டுரைக் கடிதத்துக்கு எடுத்துக்கொண்டுள்ள முன்னுரை மூலம் 'கருப்பொருளை' காதல் உலகிற்கும் உன்னை இழுத்துச் செல்ல முடியும். நிலம்நோக்கிக் குனிந்து கட்டை விரலால் பூமித்தாயின் பட்டு மேனியைக் கீறிக்காட்டும் கன்னியரின் 'காதல்' உள்ளத்தையும் உனக்கு எடுத்துக்காட்ட முடியும். 'யார் உள்ளித் தும்மினீர்?' என்ற மனையாட்டியின் ஊடல் தன்மைக்கு விளக்கமளித்து வள்ளுவத்தின் சிறப்பினையும் உனக்கு விண்டுக்காட்ட முடியும்!

> மத்திய அரசு, சேலம் இரும்புத் தொழிற்சாலைபற்றிய கருத்தில் எப்படி எப்படித் தன்னை மாற்றிக்கொண்டு வந்துவிட்டது

என்பதையும் விளக்கிக் காட்டமுடியும் வைப்புமுறை ஒன்றுதான்! விளக்கமுறைதான் வேறுபடுகிறது! சிந்தித்தால் கிடைக்கும் தெளிவு! படித்தால் கிடைக்கும் பயன்!!

> 'என்ன இப்படிப் பேசிவிட்டாரே மத்திய அரசின் இரும்புத் தொழில் அமைச்சர் திரு. சென்னாரெட்டி?''

என்று கேட்டு நீ எழுதி இருந்த கடிதத்தைக் கண்ட பின்னர்தான் எனக்கு மேற்கண்ட விளக்கத்தை உனக்குத் தரவேண்டும் என்ற எண்ணமே எழுந்தது.

## முரண்பாடே! உன் பெயர்தான் காங்கிரசுத் தலைவரா?

''இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை என்பதில் இங்குள்ளவர்கள் மக்களை வேறு விதமாகத் தூண்டிவிடுகின்றனர். இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும் வரை என்றால், எத்தனைக் காலம் என்று இந்தி பேசுவோர் அவசரப்படுகின்றனர்!''

—சேலம் கூட்டத்தில் காமராசர்.

''இந்தி பேசாத ராஜ்யங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். கால கெடுவோ, நிர்ப்பந்தமோ இதில் கூடாது மொழி மசோதாவைக் கொண்டு வருவதில் இனியும் தாமதம் கூடாது,

—தஞ்சையில் காமராசர்.

## தரமிக்க தலைவரே!

சேலத்துக்கும் தஞ்சைக்கும் தொலைதூரம் என்பதாலோ முரண்படப் பேசினீர்! மக்களைக் கருத்துக் குருடாக்கிப் பேசினீர்? சேலத்தில்—இந்திக்காரர்கள் பட்ட அவசரத்துக்குத்தான் தஞ்சையில் நிர்ப்பந்தம் கூடாது என்ற பதிலோ? காலகெடு தேவை இல்லை என்ற தடுமாற்றமோ?

பேச்சாற்றலை எப்படியும் புலப்படுத்திக் காட்ட முடியும் என்பதற்கு அவர் பேச்சு ஒரு எடுத்துக்காட்டு! அதனைப் புரிந்துகொண்ட தன்மை என்பதற்கு உன் கடிதம் ஒரு எடுத்துக்காட்டு!!

சேலம் இரும்புத் தொழிற்சாலை உண்டா? இல்லையா? என்ற செய்தியாளர்களின் வினாவையும், அவர்தம் உள்ள மாண்பையும், திரு. சென்னாரெட்டி அவர்கள் புரிந்துகொண்ட தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு!!

திரு. சென்னாரெட்டி அவர்கள் பதவிப் பொறுப்புக்கு வருமுன்னரேயே எழுப்பப்பட்டது சேலம் இரும்புத் தொழிற்சாலை கோரிக்கையாகும்! இந்தக் கோரிக்கைக்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வயதும் ஆகிவிட்டது என்பது ஏற்கெனவே 'காஞ்சி'யில் டாக்டர் திரு. எஸ். சரவணன் M SC. PH D அவர்களது ஒரு கட்டுரை எடுத்தாளப் பெற்றிருப்பதிலிருந்து நீ அறிந்திருப்பாய். 1818-ம் ஆண்டு முதன் முதலில் சேலம் இரும்புப் படிவங்களை, இரும்பாக்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்ட பழங்கதைபற்றியும் கண்டிருக்கக்கூடும். அங்கே 55-மில்லியன்டன்கள் இரும்புக் கனி கிடைக்கக்கூடும் என்று அப்போதே ஆராய்ச்சி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதனையும் தெளிந்திருப்பாய்!

இப்போதைய ஆராய்ச்சி முடிவுப்படிக்கூட சேலம் இரும்புக்கனி சுமார் 37-கோடிடன் அளவு! மூன்றாம் கட்ட முடிவில். புதிய ஆராய்ச்சி சேலம் கனிவளத்தை மூன்றுக் கட்டங்களாகப் பகுத்து முதல், இரண்டாம், மூன்றாம் கட்டமாகத் தொகுத்துத் தந்திருக்கிறது. மூன்றாம் கட்ட இறுதியில் இன்னும் விரிவாக ஆராய்ந்தால் இப்போதைய அளவைவிட இரண்டு மடங்குக்குமேல் அதாவது 75-கோடிடன் அளவுக்குக் கிடைக்கக்கூடும் என்று மதிப்பிடப் பெற்றிருக்கிறது. முதலாம் கட்டம் சுமார் 5-லட்சம் டன் அளவு உற்பத்திக்கு மட்டுமே! இந்த 5-லட்சம் டன் அளவு உற்பத்திக்குத்தான் இப்போதைய குரல்! போராட்டம்! மறுப்புரைகள்! விளக்கங்கள்!! தெளிவுரைகள்!

தெளிவாகவும், திரு. சென்னாரெட்டி அவர்களுக்குப் புரியும்படியாகவும் சொல்லவேண்டுமானால்—

ரூர்கேலாவின் வயதைவிட

துர்க்காபூரின் வயதைவிட,

பிலாயின் வயதைவிட,

சேலம் இரும்புத் தொழிற்சாலைக் கோரிக்கையின் வயது அதிகமானது!

நண்பா! திரு. சென்னாரெட்டி அவர்கள் இப்போது புதிய புரளியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்!!

முன்பு உருக்கு மந்திரியாக இருந்த எவரும் கிளப்பாத புரளி!

திரு. சி. சுப்பரமணியம் அவர்கள்கூட எடுத்துக் காட்டாத விளக்கம்!

திரு. ம. பொ. சி. தலைமையில் சென்ற தூதுக் குழுவிடம் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்கூட விண்டுக்காட்டாத உண்மை!

சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டத்திற்கான அனுமதியுடன் திரும்பி வருவேன் என்று இதற்கென்று தனியாக ஒருமுறை விமானம் ஏறிச் சென்று கண்ணீர் வழியவழிய—

மூச்சு அடைக்க அடைக்க—மக்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்ற ஏக்கம் கப்பிய நிலையில் திரும்பி வந்த முன்னுள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களிடம்கூட எடுத்துக் காட்டப்படாத செய்தி!!

ஏன்? காங்கிரசுத் தலைவராக இரண்டு முறை இருந்து எ த்தெறியப்பட்ட நிலையில் பதவிவகித்து வருபவரும், மூன்ரும் முறைப் படையெடுப்பில் திரு. யு. என். தேபர் அவர்களது போட்டியைச் சமாளிக்கும்படியான நிலைமையைச் சந்தித்திருப்பவருமான திரு. காமராஜ் அவர்களிடம்கூட விளக்கிக் காட்டப்படாத புதிர்!!

சுமார் மூன்றரை ஆண்டுக்கால அவகாசத்தில் தன் உற்பத்தியை வெளிக்கொண்டு வந்து, அந்நியச் செலாவணிச் செலவின் பெரும் பகுதியை மிகுதிப்படுத்திக் காட்டும் வல்லமையை தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள சேலம் திட்டத்தின்படி ஒரு டன்னுக்கு மட்டும் போடப்படும் முதலீட்டுத் தொகை சுமார் ரூ. 2130 மட்டுமே!

இதே வேளையில், இந்த அளவு உற்பத்திக்கு ரூர்கேலா ரூ. 2115-ம், துர்க்காபூர் ரூ. 2270-ம் பிலாய் ரூ. 2208-ம் செலவிட்டுத் தீரவேண்டும்! சேலம் திட்டத்திற்கு முதலீடு செய்வதைவிட, பிற திட்டங்களுக்கு அதிகமான முதலீடுகள் தேவை என்பதற்கு மட்டுமே, இந்த எடுத்துக்காட்டு.

இத்தகைய புள்ளி விவரங்களை மத்திய அரசுக்கும் அந்த அரசில் உருக்கு மந்திரியாக இருந்து இயங்கிக் கொண்டிருந்தவர்களுக்கும் இதுவரை எத்தனையோ முறைஎத்தனை எத்தனையோ விதங்களில் எடுத்துக்காட்டப்பட்டு வந்திருக்கின்றன.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்பட்டால், அத்திட்டத்திற்கு ஜப்பான் பொருளுதவி புரிவதாகவும் கூறி ஆண்டுகள் பலவும் கடந்து போய் விட்டன.

இப்போது பொறுப்புக்கு வந்துள்ள திரு. சென்னு ரெட்டி அவர்கள் "ஜப்பான் உதவிபற்றித் தெரியாது" என்று கூறி இருக்கிருர் இப்போதும்! சூலைத் திங்கள் கூட ஜப்பான் உதவிபற்றித் தமக்கு ஏதும் தெரியாது என்றுதான் சொல்லிச் சென்ருர்! அவர் விரும்பி இருந்தால் கடந்த இரண்டு மாதகால அவகாசங்கள் போது மானவை. அந்த உதவியின் அளவும் முறையும் பற்றிய முழு விவரங்களும் கேட்டுத் தெரிந்துகொள்ள! விருப்பமில்லை போலும், அதுபற்றித் தெரிந்துகொள்ள!!

சேலம் திட்டம் அமைக்கப்படுவதற்கு இடையூருக இருந்த காரணம் இதுவரை அறிவிக்கப்பெற்று வந்தது

"நிதி வசதி இல்லை"

என்று மட்டும்தான்! ஆனல் கடந்தகால அவகாசம் திரு. சென்னு ரெட்டி அவர்களுக்கு,

'4-வது ஐந்தாண்டுத்திட்ட முடிவு காலத்தில் ஆண்டுக்கு எண்பது லட்சம் டன் இரும்புதான் தேவைப்படும்;

இதனை அரசாங்கத்தின் இப்போதைய இரும்புத் தொழிற்சாலைகளும் தனிப்பட்டவர்களது தொழிற்சாலைகளும் நிறைவு செய்து விடும்;

ஆகையால் புதிய தொழிற்சாலைகள் தேவையில்லை.

இரும்புத் தொழிற்சாலைகளில் பெரிய அளவில் முதலீடு செய்யும்போது தேசத்தின் முழுப் பொருளாதார நிலைமையையும் கருத்தில் கொள்ளவேண்டும்,"

—என்ற புதிய தெளிவினைக் கண்டுபிடிக்கத்தான் பயன் பட்டிருக்கிறது.

நிதி வசதி இல்லை என்ற நிலைமை மாறிப்போய் "உற்பத்திப் பொருள் தேவை இல்லை" என்ற கட்டத்துக்கு வந்தாகிவிட்டது நண்பா!

முதல் மூன்று திட்டங்களிலும் உருக்குத் தொழிற்சாலைத் திட்டங்களுக்கென ரூ 960 கோடியை ஒதுக்கி விட்டு—அதிலே பிலாயை, ரூர்கேலாவை, துர்காபூரை உருவாக்கிக் கொடுத்துவிட்டு, நான்காம் திட்டத்தில் கூட அந்த தொழிற்சாலைகளின் விஸ்தரிப்புக்கு என்று 1450 கோடியையும் ஒதுக்கி வைத்துவிட்டுத்தான்,

நாலாம் திட்ட இறுதியில் உற்பத்தியாகும் இரும்புக்கனி இந்தியத் திட்டங்களுக்குப் போதுமானது

## தரக்குறைவுத் தலைவர்!

தி. மு. கழகத்தார் ஆட்சிக்கு வந்துவிட்டதால், நாம் பொருமைப்படுவதாக மந்திரிகள் போகுமிடங்களிலெல்லாம் சொல்கிருர்கள்.

நாம் இருந்தபோது அவர்கள் பொருமைப் பட்டிருப்பார்கள் போல் தெரிகிறது.

நாங்கள் உங்களைப்போல் அவ்வளவு தரக் குறைவாகப் போகவே மாட்டோம்!

—திருவாரூர் கூட்டத்தில் காமராசர்.

ஐயா! தரமுயர்ந்த தலைவரே! அகன்ற இதயமும் ஆழமான அறிவும் கொண்ட அறிவாளரே!

தி. மு. க.வுக்கு மரண அடி கொடுப்போம் என்று அன்று பேசியதற்கு என்ன பொருளோ? 67,000 அடி ஆழத்தில் கழகத்தைப் புதைப்போம் என்று பேசியது தரமுயர்வோ?

எங்கள் அண்ணனின் குடும்பத்தை இழுத்து இழித்துப் பழித்து ஏச்சுக்கள் உகுத்தது எந்த தரமுயர்வோ?

**ஏகாரமிட்டுப் பேசி இருக்கும் ஏந்தலே!**

கூட்டாட்சி ஏற்பட்டால் அனுமதிக்கவே மாட்டேன் என்றது யாரோ? என்ன பொருளோ?

**பொருமையின் மொத்த உருவமே! நீயா புநிதம் பேசுகிருய்? நீயா தரம்பற்றிப் பேசுகிருய்?**

என்கிருர் திரு. சென்னு ரெட்டி என்ருல், இவர் இவரே கூறுவது போல புதிய இரும்புத் தொழிற்சாலைகளில் பெரிய அளவில் முதலீடு செய்யுமுன் இந்தியப் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டுதான் செயல்படுகிருரா? என்றுதானே நினைக்கத் தோன்றுகிறது?

கூர்ந்து கவனியேன்! உருக்கு அமைச்சரின் பேச்சையல்ல—அவரது செயலகத்தின் திட்ட நெறி முறையை!

பொகாரோவுக்கு ரூ 648 கோடி

பிலாய்க்கு ரூ, 111 கோடி

ரூர்கேலாவுக்கு ரூ. 147 கோடி

துர்க்காபூருக்கு ரூ. 374 கோடி

ரூபாய்கள். அவை ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும்முறைமையிலிருந்து விரிவுபடுத்திவிஸ்தரிக்கமட்டும்!

இந்த விஸ்தரிப்புத்திட்டத்துக்கு மட்டும் ரூ 1450 கோடியை ஒதுக்கி வைத்துவிட்டுதான்—இவைகள் உற்பத்தி செய்துத்தரப்போகின்ற அளவையும்கணக்கில் வைத்துக் கொண்டுதான்—

"புதிய தொழிற்சாலைகளின் புதிய உற்பத்தி இனி இந்தியாவுக்குத் தேவை இல்லை"

என்று பேசுகிருர் திரு. அமைச்சர் ரெட்டி அவர்கள்!

## எழுவாய்! தொழுவாய்!!

கன்னி இளமானே! காதல் மொழித்தேனே!
வண்ணக் கிளிமாதே! வாள்விழிப் புலர்ந்தாயோ?
விண்ணுர் விரிவையம் வீசுமிளப் பூங்காற்றும்
கன்னல் நெல்மணிகள் காவிரித்தாய் நீர்பெருக்கும்
அண்ணன் திருநாளில் ஆடிமகிழ்ந் திருக்க
பொன்னுர் திருமகளே! புதுவைப்பா பூங்குயிலே!
இன்னும் விழித்திலேயோ? எழுவாய்நீ எம்பாவாய்!
தென்னர் மன்னவனின் புகழ்பாடி வாழ்த்துவையே!

முன்னைப் பழம்பெருமை முடிமன்னர் குடியாட்சி
பின்னைப் புதுமைபெற பிறப்புரிமை பெற்ருனை
அண்ணல் இளங்கோவின் அறநெறியில் நிற்பானை
கன்னல் தமிழரசை கவின்பெறச் செய்வானை
தண்ணுற் ஒளிமலர்கள் தலையாட்டி வரவேற்க
பெண்ணே! பேரழகே! எழுவாய்நீ எம்பாவாய்!
தன்னே ரில்லாத தென்தலைவன் அண்ணுவை
பொன்னுல் பாவிசைத்துப் புகழ்பாடி வாழ்த்துவையே!

கங்குல் கிழித்தான் காலையிளச் செம்பரிதி
சங்கு முழங்குது! சங்கத்தமிழ் வளர்ந்திடவே!
திங்கள் ஒளிஅண்ணு! தீந்தமி ழரசுபுகழ்
வங்கக் கடல்தாண்டி வையமெலாம் தாம்பரவ
பொங்கும் பேரின்பில் பூந்தமிழர் மகிழ்ந்தாட
தங்கச் சிலையழகே! எழுவாய்நீ எம்பாவாய்!
பங்கயப் பூம்புனலில் பாய்ந்தாடி இந்நாளில்
செங்கம லர்கையால் தொழுவாய்நீ! வாழ்கஅண்ணு!

—கவிஞர் சுரா

உள்ள தொழிற்சாலைகளை விரிவு படுத்தத் திட்டம் தீட்டிக்கொண்டுவிட்டு—அதற்கென கோடிக் கணக்கில் நிதியும் ஒதுக்கிக் கொண்டுதான்

"புதிய தொழிற்சாலைகள் தேவை இல்லை"

என்கிருர்கள்! நிதி வசதி இல்லை' என்ற காரணத்தால் நீட்டித்துக்கொண்டு வந்த திட்டம்—அந்தக் கால நீட்டிப்புக் காரணமாக

தேவை இல்லை

என்ற அளவுக்கு வந்தாகிவிட்டது!!

விஸ்தரிப்புக்கு வழி வகை செய்துகொண்டுவிட்ட மேற் சொன்ன இரும்புத்தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் போடப்படுகிற மொத்த முதலீட்டு அளவைவிட அவற்றின் உற்பத்திச் செலவு அளவின் கணக்கைவிட—ஆகின்ற அந்நியச் செலாவாணி நிதியைவிட—ஈட்டித் தருகின்ற லாபவிகிதத்தைவிட சேலம் மிகக் குறைந்த முதலீட்டைக் கொண்டது என்று தெரிந்த பின்னர், உற்பத்திச் செலவு மிகக் குறைந்தது என்று கணக்கிட்டுப்பார்த்துப் புரிந்து கொண்டபின்னர்—உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் தருவிக்க தூரம் மிகக் குறைவானதே என்று கண்டறிந்து கொண்ட பிறகு லாபகரமானது என்று உணர்ந்து கொண்டதற்கு அப்புறம் மற்றெல்லா தொழிற்சாலைகளிலும் உற்பத்தியாவதைவிட சேலம் கனி தனியானது—சிறப்பு அம்சம் வாய்ந்தது! என்ருேதி யுணர்ந்த பின்னுல்

வடக்கேயுள்ளவை விஸ்தரிக்கப்படுகின்றன!

தெற்கே தேவை இல்லை என்ருகிறது.

இனிமேல் இந்திய அரசு திட்டங்களே போடப்போவதில்லை என்ருகிறது! அல்லது போட்டாலும் தென்னகம் இரும்பு உற்பத்தி செய்து, அதனைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டிய அவசியத்தில் மத்திய அரசு இல்லை என்ருகிறது!

இதனை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளத் தயாரா?

இந்தியத் தேவைக்குப் போதுமானவற்றை இப்போதைய இலக்குகள் எட்டிப் பிடித்துவிடும் என்பது இப்போதுதான் கண்டு பிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்பா? அதாவது விஸ்தரிப்புத் திட்டதுக்கு நிதி ஒதுக்கிய பிறகு கண்டறிந்ததா? அல்லது அதற்கு முந்தியே தெளிந்த ஞானமா?

பெரிய அளவுக்கு ஒரு திட்டத்தில் முதலீடு செய்யுமுன், நாட்டின் பொருளாதார வசதியையும் கவனிக்க வேண்டும்.

என்ற ஞானோதயம், விஸ்தரிப்புத் திட்டத்துக்கு முந்தியதா? சேலம் கோரிக்கைக்குப் பிந்தியதா?

விஸ்தரிப்புத் திட்டத்திற்கு முந்திய கண்டு பிடிப்புத்தான் இவையென்ருல், சேலம் கோரிக்கைக்கு 'நிதி வசதிகள் இல்லை' என்று சொல்லி வந்த கூற்று போலியானதா? பொய்யானதா? திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தில் கூறப்பட்டதா?

முன்னுள் தொழிலமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இவை

யாவற்றையும் அறிவாரா? மாட்டாரா? அறிவிக்கப்பெற்ருரா? இல்லையா? இல்லையென்ருல், ஏன்?

வடக்கேயுள்ள இரும்புத் தொழிசாலைகளின் உற்பத்தித் திறனை விரிவு படுத்தி—அதிக அளவு உற்பத்திக்கு வழி கோலிவிட்டு, சேலம் திட்டம் இல்லை என்பதோ, தேவையற்றது என்று கூறுவதோ, தமிழகமும், இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மாநிலம்தான்! என்று ஒப்புக் கொண்டு—ஏற்றுக்கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது என்ற நம்பிக்கையைத் தோற்றுவிப்பதாக இல்லை!

வடக்கின் உற்பத்திக்கு, தென்னுட்டை வாணிகக் களமாக்கி வைத்திருக்க வேண்டும் என்ற 'சூது மதி' கொண்டு இயங்குவதாகத்தான் எண்ண முடிகிறது!

திரு. சென்னு ரெட்டி அவர்களது பேச்சுக்குத் தமிழக முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் பதில் கூறி இருப்பதுபோல,

> சேலம் உற்பத்தி விசேடதரமானது—தேவையானது—முன்னரே ஒப்புக் கொள்ளப் பட்டிருப்பது.
>
> சேலம் திட்டத்தின்படி உற்பத்திக்கு 'மார்க்கெட்' நீடிக்கும் நிலையிலுள்ளது.
>
> இதன் உற்பத்தி 'தேக்க' நிலையை உண்டு பண்ணுதது.

எனவே உருக்குத் தொழில் மந்திரி, தம் சென்னைப் பேச்சின் விளைவை, கவனமாய்ப் பரிசீலிக்கவேண்டுவதுடன் ஜப்பானின் உதவி பற்றித் தமது உதவியாளர்களிடம் கேட்டாவது தெரிந்துகொண்டு, சேலம் திட்டத்தை ஒப்புக்கொண்டு, செயல்படுத்தச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம்:

> போலியான ஒருமைப்பாட்டுப் பேச்சு பேசப்படுகிறது என்ற வாதத்தை மறுக்க முயலவேண்டும்.

அத்துடன் தமது பேச்சாற்றலை, உருக்கு உபரியாகிவிடும் என்ற தன்மையின்மீது செலுத்தாமல், தனிரக உற்பத்தியை இன்னின்ன விதத்தில், இன்னின்ன தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்ற விதத்தில் செலுத்திப் பார்க்கவேண்டும்.

பேச்சின் கருவை சோற்றுக் கற்ருழைத் தன்மையாக்கிவிடாமல், '4-ம் திட்ட இறுதியில் தேவையேற்பட்டால் சிந்திப்போம்'' என்ற முறையில் அல்லாமல், இதுவரையில் கூறிவந்ததுபோல, தேவையான ஒரு திட்டம் என்ற அளவிலேயேகொண்டு, பேசிப் பழக வேண்டும்!

'ஜப்பான் உதவிபற்றித் தெரியாது' என்று கூறித் தப்பிக்க முயலுவதுபோல் அல்லாமல் — அப்படி ஏதேனும் ஒரு உதவி கிடைக்குமானல், அதனை வேறு ஒன்றுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று கூறுவதற்குப் பயன்படுத்தாது—உரிய உதவியை உரிய திட்டத்திற்கு—உரிய காலத்திலேயே பயன்படுத்தவும் உரிய கோரிக்கைக்கு செவிமடுத்து உரியோர்தம் உரிமைக்கு மதிப்புக்கொடுக்கும் விதத்திலும், செலவிட்டால்—செலுத்திப்பார்த்தால் — திரு. சென்னுரெட்டி அவர்கள், தமிழக மக்களின் எண்ணத்தில் உயர்ந்துகாணப்படவே செய்வார்!

உன்போன்ற நண்பர்கள் 'என்ன இப்படிப் பேசிவிட்டாரே!' என்று உணர்கின்ற நிலையிலிருந்து 'இப்படியும் அவரால் பேசமுடியும்' என்று சுவையை மாற்றியுணர வாய்ப்புண்டாகும்!

எழுத்தாளர்களுக்கு மத்திய உருக்கு அமைச்சர் திரு. சென்னுரெட்டி அவர்கள் இப்படி மட்டுமல்ல—இப்படியும் பேசத்தெரிந்தவர் என்று எழுதி விமர்சிக்கும் நல்வாய்ப்புக்கள் கிட்டும்!

அந்த நல்வாய்ப்புக்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒட்டுறவுக்கு வழிகாட்டுவதாக மாறும்! ஒருமைப்பாடுபற்றிய ஐயப்பாட்டை நீக்குவதாக இருக்கும்!

காதலியின் கண் அசைவுக்கு இது மட்டும் பொருளல்ல—இப்படியும் உண்டு என்று விளக்கிக் காட்ட முடியும்!

ஒருவரது பேச்சாற்றலுக்கு பகைமையை வளர்க்க மட்டுமல்ல—நட்புணர்வையும் உண்டாக்க முடியும் என்று எடுத்துக் காட்டும் வாய்ப்பு பிறக்கும்!

கால நீட்டிப்புக் காரணமாக சேலம் திட்டம் இல்லாமற் போய்விடுமோ என்று ஏற்படுத்திவிட்டுப் போய்விட்ட களங்கம், கழுவப்பட்டு, கழுவாய் தேடிக் கொண்டதாக இருக்கும்!

ஒருமைப்பாட்டை உண்டாக்கிவிட முடியும் என்ற அரிப்பில், துடிப்போடு மொழி விவகாரத்தில் தன்னைப் பிணைத்துக் கொண்டுள்ள மத்திய அரசு, ஒற்றுமை, மொழியால்—மொழி உணர்வால் மட்டுமல்ல —உள்ள ஒன்றிப்பாலும் ஆவதாகும் என்பதனை ஏற்றுக்கொள்கிறதா? என்கிற விஞவிற்குப் பதிலாகவும் இருக்கும்!

நம்புவோம் நண்பா! இன்னெரு போராட்டத்துக்கு நம்மை இழுத்துச் செல்லமாட்டார்கள் என்று நம்புவோம்! இன்னெரு எழுச்சிநாளை நம்மிதயம் ஈன்றெடுக்க விடமாட்டார்கள் என்று நம்புவோம்!

திரு. வெங்கட்ராமன் விட்ட இடத்திலிருந்துதான் இப்போதைய தமிழக அரசு — அறிஞர் அண்ணுவின் அரசு சேலம்திட்டத்தில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களே அறிவித்திருக்கிருர்கள்.

தமிழகத்துக்கு அண்ணு அவர்களது சீரியதலைமை இருக்கின்ற வரையில் நமக்கு எந்த ஒன்றுக்காகவும் போராட்ட அரிப்புத் தேவையில்லை.

> நம்மை அறிந்த அரசு—நம் தேவைகளை உணர்ந்த அரசு—

கோலோச்சிக்கொண்டிருக்கிறது தமிழகத்தில்!

'இரும்புத் தொழிற்சாலை தேவை இல்லை' என்ற சீற்றத்துக்கு அந்த அரசு பதிலிறுக்கும். நம் பொறுப்புக்களை அரசிடம் விட்டுவிடுவோம்! அரசின் கரங்களை வலுப்படுத்தும் பணியில் இப்போதைக்கு உன்னையும் என்னையும் பிணைத்துக்கொள்வோம்!

அன்புள்ள,

**திருவரூர் முத்துராமன்.**




3—20

## "உலகம தூற்றுது!"

'உன் அண்ணன் மதுரையின் சிம்மாசனத்தை அலங்கரிக்கப்போகும் நாள் நெருங்கிவிட்டது செந்தாமரை, நெருங்கிவிட்டது!' என்று வீரபாண்டியன் குதூகலத்தோடு சொல்லிவிட்டு, தங்கையின் எதிரேவந்து உட்கார்ந்தான்.

'நாள் நெருங்கிவிட்டதா?' என்று செந்தாமரை முணு முணுத்தபடி. வாயின் அருகே எடுத்துச்சென்ற பலாச்சுளையைத் திரும்பவும் தட்டிலேயே வைத்துவிட்டாள்.

'சாப்பிடம்மா!'

'போதும் அண்ணா!'

'வைத்த பழங்கள் தட்டில் அப்படியே இருக்கின்றனவே?'

'பசி இல்லாதபோது எப்படி அண்ணா சாப்பிடமுடியும்?'

'பாலாகிலும் குடி அம்மா!' என்று உட்கார்ந்திருந்தவன் சிறிது முன்னால் நகர்ந்து பால் செம்பை எடுத்து அவளிடம் தந்தான்.

பாலைச் சாப்பிடும்போதே, 'என் அண்ணாவின் ஆசைக் கோட்டைகளைத் தவிடுபொடியாக்கவா நான் வந்திருக்கிறேன்!' என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் புரண்டு விழுந்தது.

மதுரைக்கு வடக்கே இருபது கல் தூரத்திற்கு அப்பால் ஒரு மலை. அந்த மலையின் உச்சியில் சிறியதொரு குகை, அந்தக் குகையின் முன்பு படர்ந்து வளர்ந்திருந்த ஆல மரத்தின் அடியில் செந்தாமரையும் அவளது அண்ணன் வீரபாண்டியனும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

'சில நாட்களாக சோகத்தோடு இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்தது! அது கேட்டது முதல் நான் வேதனையடைந்தேன்! வேறு எந்த வேலையின் மீதும் என் சிந்தனை செல்லவில்லை? ஆகவே நானே மதுரைக்கு வந்து உன்னை ஒரு முறை பார்த்துவிட்டுவர முடிவு செய்தேன்! முதலில் உனக்கு நான் வரும் நாளை அறிவித்துவிட்டு அதன் பிறகு வருவதுதான் நல்லதென்று நினைத்தேன்! அப்படி அறிவித்து விட்டு வரச் சொன்ன வீரனோடேயே தீடீரென்று நீ புறப்பட்டு இங்கு வந்துவிடுவாய் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை, செந்தாமரை!' என்று வீரபாண்டியன் கூறியபடி, தட்டிலிருந்து ஒரு மாம் பழத்தை எடுத்தான்.

'என் மீது உங்களுக்கு இருக்கும் அன்பு ஆபத்தாக எங்கே முடிந்து விடுகிறதோ என்று பயந்தே நான் புறப்பட்டுவிட்டேன்! மதுரைக்குத் தாங்கள் வருவதை யாராவது பார்த்துவிட்டால்?' அது தங்கள் உயிருக்கே ஆபத்தாக முடிந்தாலும் முடிந்துவிடும் அல்லவா?'

'செந்தாமரை, உனக்கென்னம்மா கவலை? எதற்காக நீ சோகத்தோடு இருந்தாய்?'

'வாழ்க்கையில் சுகமும் துக்கமும் மாறி மாறி வருவது இயற்கைதானே அண்ணா?'

'இயற்கை இருக்கட்டும் செந்தாமரை அப்படி உன் உள்ளத்தை வாட்டிய கவலையின் காரணத்தை நான் அறியக் கூடாதா?'

'உண்மையைச் சொல்வதா கூடாதா என்று ஒரு கணம் தயங்கினாள். எப்படிச் சொல்வது என்ற நாணம் குறுக்கிட்டதனால், 'உங்கள் நிலைமையைப் பற்றி எண்ணித்தான் அப்படி நான் துக்கமடைந்தேன், அண்ணா!' என்று ஒரு பொய்யைச் சொல்லி, அந்த நெருக்கடியிலிருந்தும் தப்பினாள்.

'நான் எண்ணியது சரியாக இருக்கிறது, செந்தாமரை! என் கவலை தான், உன் உடலையும் உருக்கிவிட்டிருக்கிறது! நாம் அனுபவிக்கும் தொல்லைகளுக்கும், நாம் படும் கவலைகளுக்கும் முடிவுகாலம் வந்துவிட்டது, செந்தாமரை! இந்த வீர பாண்டியன், பாண்டிய மண்டலத்தின் அதிபதியாகப் போகிறான்! குடும்பத்தின் இழந்த புகழை புதுப்பிக்கப்போகிறான்! பராக்கிரம பாண்டியனின் மகன், பார்புகழும் மாவீரன் என்ற மகுடத்தை அடையப்போகிறான்! செந்தாமரை, அந்த நம்பிக்கையின் சூரியோதயம் என் கண்களுக்கு நன்றாகப் புலனாகிறது!'

'குலசேகர பாண்டியனை ஒழித்துத்தானே அண்ணா, நீ மதுரையின் அரசுக் கட்டிலில் அமரப் போகிறாய்?'

'ஆமாம் அம்மா நம்முடைய அந்தப் பகைவனின் கல்லறையின் மீது தான் என் அரசு கட்டில் இருக்கப் போகிறது! குலசேகரன் என்று திருமேனியைக் காதலித்தானோ அன்றே பிறந்துவிட்டது அம்மா, நம்முடைய பொன்னாள்! வாழ்க்கையின் இன்ப நாள்!' என்று பூரிப்போடு வீரபாண்டியன் பேசினான்.

'நம்முடைய பொன்னாள்! வாழ்க்கையின் இன்ப நாள்! என்று செந்தாமரை உணர்ச்சியற்ற குரலில் மெல்ல முணு முணுத்தாள்.

'ஆமாம் செந்தாமரை, இன்ப நாள் மலரப்போகிறது இன்னும் சில வாரங்களில்! யானை கொழுத்தால், தன் தலையிலேயே மண்ணை வாரிக் கொட்டிக்கொள்ளும் என்பார்களே —அதே போலக் குலசேகரன் தன் அழிவைத்தானே தேடிக்கொண்டான்! எந்த இராசாதிராச சோழனின் உதவியினால் மதுரையின் மன்னனானானோ, அதே சோழனை இப்பொழுது குலசேகரன் பகைத்துக் கொண்டிருக்கிறான்! எந்தப் பராக்கிரமபாகுவினால் தொல்லைப்படுத்தப் பட்டானோ, அதே இலங்கை மன்னனோடு கைகுலுக்க ஆரம்பித்துவிட்டான்! திருமேனிக்கும் குலசேகரனுக்கும் திருமணமும் நடந்துவிட்டது! சோழ மன்னனை அவமதிக்க, குலசேகரன் செய்த வெளிப்படையான காரியமாகும் அது!'

'சோழ மன்னருக்கு அழைப்பு அனுப்பவில்லையா?'

'அனுப்பினான். ஆனால் அனுமதி பெற்றானா?'

'எதற்கு அண்ணா அனுமதி பெற வேண்டும். குலசேகரன் என்ன சோழனுக்குக்கீழ்ப்படிந்த சிற்றரசனா?'

'குலசேகரன் சிற்றரசன் இல்லாமல், மன்னர் மன்னனா?'

எனக்கு உதவி செய்தால், உமக்கு அடிமை அரசனாக இருந்து கப்பம் கட்டுகிறேன் என்று குலசேகரன் அப்பொழுது ஒன்றும் ஒப்பந்தம் செய்துகொள்ள வில்லையாமே?'

'அடிமை அரசனாக இருந்து கப்பம் கட்டுவதாக ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை — உண்மைதான்! ஆனால் சோழன் எந்த நிபந்தனையின்மீது அவனுக்கு உதவி செய்ய இசைந்தான்? சைவ மதத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்—அந்த மதத்தைப் பரப்ப வேண்டும்—என்ற ஏற்பாட்டின்படிதானே, சோழன் உதவி செய்ய முன்வந்தான்? அந்த உதவியைப் பெற்றுத்தானே, நம் குடும்பத்தை இரத்த ஆற்றில் மூழ்கச் செய்தான்? அந்தநேரத்தில் சோழன் அவனுக்கு உதவி செய்யாமல் இருந்திருந்தால் குலசேகரன் என்று ஒருவன் வாழ்ந்ததாகவே மக்கள் நினைவில் வைத்துக் கொண்டிருந்திருக்க மாட்டார்களே! அந்த உதவியை குலசேகரன் ஒரு கணம் நினைத்துப் பார்த்தானா?'

'எனக்குத் தெரிந்த அளவில், குலசேகரன் அந்த நன்றியை மறந்ததாகத் தெரியவில்லையே! அவர் சைவராகவே இருக்கிறார்! சைவத்தைப் பரப்பும் கைங்கரியத்திற்குப் பொன்னையும் பொருளையும் வாரி வாரிக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்.'

'இன்னமும் நீ குழந்தையாகவே இருக்கிறாய், செந்தாமரை! வெளி நடப்புகளைக் கொண்டு, ஒருவனின் அகத்தை நிர்ணயிக்கக் கூடாது! சைவத்தை வளர்க்க பொன்னையும் பொருளையும் வாரி வாரிக் கொடுத்துக்கொண்டே, ஒரு பௌத்த மன்னனின் மகளுக்கு மாலையிட்டான் அல்லவா?'

'ஆமாம் அண்ணா, அதிலென்ன தவறு?'

'அவன் உள்ளபடியே சைவனாக இருந்தால் சைம சமயத்தில் அவனுக்கு உண்மையான பற்றும் பாசமும் இருந்தால் — ஒரு பௌத்த அணங்கின் கரத்தைப் பிடித்திருப்பானா?'

'காதலில்கூட மதம் குறுக்கிட வேண்டுமா, அண்ணா?'

'நிச்சயமாகக் குறுக்கிடும்! மனிதனுடைய மன வலிமையைச் சோதிக்கும் சந்தர்ப்பம் அதுதானே அம்மா? மதம் பெரியதா, காதல் பெரியதா என்ற போராட்டம் ஏற்படும்போதுதான் ஒருவன் எதற்கு முக்கியத்துவம் தருகிறான் என்பது புலனாகும்! குலசேகரனுக்கு மதம் முக்கியமல்ல, காதல்தான் முக்கியமென்பதை அந்தக் கட்டழகியை மணந்ததின் மூலம், உலகறியச் செய்துவிட்டான் அல்லவா? அவனுக்கு சைவத்தின் மீது உண்மையான நம்பிக்கை இருந்திருந்தால்—சைவம் அவனது இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்துவிட்டிருந்தால் ஒரு பௌத்த பெண்ணைத் தனது தாரமாக ஏற்றுக் கொண்டிருப்பானா? அவளைச்சைவத்தைத் தழுவச் செய்து, அதன் பிறகு அவளை ஏற்றுக்கொண்டிருந்தால், அவன் நடத்தையில் நாணயம் இருக்கிறது என்று சோழன் நம்புவான்!...செந்தாமரை, இப்பொழுது புரிகிறதா குலசேகரன் சோழனுக்குத் துரோகம் செய்துவிட்டான் என்பது! அதனால்தான் சோழன் மிகவும் கொதிப்போடு இருக்கிறான்!'

'சோழ மன்னரைத் தாங்கள் சந்தித்தீர்களா, அண்ணா?'

'சந்தித்தேனா? அடிக்கடி சந்தித்துக்கொண்டுதான் அம்மா இருக்கிறேன்! ஒரு வாரத்திற்கு முன்புகூடச் சந்தித்தேன்! ஒற்றர் நாயகம் தூமகேது இருக்கிறானே—குலசேகரனைத் தக்க நேரம் பார்த்து அழுத்த, அவன் ஏதோ பிரத்தியேக அதிகாரம் கேட்டிருக்கிறானாம்! அதைச் சோழ மன்னனே என்னிடம் கூறினான்!



'அப்படித் தர சோழ மன்னர் தயாராக இருக்கிறாரா?'

'இல்லை என்றுதான் நானாகவே யூகிக்கவேண்டியிருக்கிறது! ஏனென்றால், சோழன் தூமகேதுவைப்பற்றி அவ்வளவு நம்பிக்கையோடு பேசவில்லை!......எனக்குப் படை உதவி செய்யும்படி சோழனைக் கேட்டிருக்கிறேன்! செய்கிறேன் என்று அவன் வாய்விட்டு வாக்குறுதி தராவிட்டாலும் அவனது பேச்சிலும் போக்கிலுமிருந்து அவசியம் உதவி செய்வான் என்று நம்ப இடமிருக்கிறது! இராசாதிராச சோழன் நேரிடையாக பாண்டிய நாட்டின்மீது படை எடுத்து, அதைக் கைப்பற்றமாட்டான்! ஏனென்றால் மண்ணாசை பிடித்தவன் என்று தன்னை உலகத்தார் தூற்றுவார்களோ என்று பயந்து நடுங்குபவன் அவன்! ஆகவே குலசேகரனை அடக்க, என்னைத்தான் அவன் கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்! ...செந்தாமரை, மதுரையின்மீது விரைவில் படையெடுப்பு நடைபெறப் போகிறது! புலியோடு புலி மோதி சமரிடுவதைப் போல குலசேகரனும் நானும் நேருக்கு நேர் தாக்கிப் போரிடப் போகிறோம்! அந்தப் போர், பாண்டிய நாட்டின் வரலாற்றையே — ஏன், தமிழகத்தின் வரலாற்றையே —மாற்றி அமைக்கப் போகிறது!'

'அண்ணா!'

'ஏனம்மா, தயங்குகிறாய்?'

நானொன்று கேட்கிறேன் — தங்களுக்குக் கோபம் வராதே?

'கோபமா? உன்னிடத்திலா? வேடிக்கையான கேள்வி அம்மா இது!'

'தாங்களும் நெற்றியில் நீறு பூசினால்தானே சோழர் தங்களுக்கு

உதவியளிப்பார்! மண்ணைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசையைவிட, மதத்தைப் பரப்பவேண்டும் என்ற ஆசை அவருக்கு அதிகம்?''

''இன்றுவரை என்னை அவர் அப்படிக் கேட்கவில்லை!'' என்று தயக்கத்தோடு எழுந்தபடி வீரபாண்டியன் கூறினன்,

''இனிமேலும் கேட்கமாட்டார் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருக்கிறதா?'' என்று செந்தாமரை வினவியபடி எழுந்து நின்று, தன் அண்ணன் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

தங்கையின் கேள்விக்கு என்ன பதிலளிப்பது என்பது புரியாமல் அவன் திணறினன்,

' எந்த மதத்திலுமே தங்களுக்கு நம்பிக்கை இல்லை அல்லவா?''

''ஆமாம்!''

''அப்படிப்பட்ட தாங்கள், சைவத்தை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களே?''

''இந்தக்கேள்விக்கே இப்பொழுது இடமில்லையே செந்தாமரை!''

''இல்லை அண்ணு, தங்களைப் பற்றி எனக்கொரு திடமான நம்பிக்கை ஏற்படவேண்டும் அல்லவா —அதற்காகக் கேட்கிறேன்! சைவத்தைத் தழுவினல்தான் — சைவத்தைப் பரப்ப இசைந்தால்தான்—தங்களுக்கு உதவிப் படை தரமுடியும் என்று குலசேகரனைக் கேட்டதைப் போலவே — வற்புறுத்தியதைப் போலவே உங்களிடத்திலும் சோழர் கேட்டால், வற்புறுத்தினல், தாங்கள் என்ன செய்வீர்கள்? முடியாது என்று தைரியமாகக் கூறிவிட்டுத் திரும்பிவிடுவீர்களோ?'' என்று அவள் அடுக்கடுக்காகக் கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

''என்ன செய்வது, மணிமுடி வேண்டுமென்ருல் — எதிரியைப் பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்ருல் சோழனின் நிபந்தனையை ஏற்றுத்தானே ஆகவேண்டும்'' என்று வீரபாண்டியனுக்குச் சொல்லத் தைரியம் வரவில்லை! ஆகவே வாய் திறக்கவே அவனல் முடியவில்லை!

'அண்ணு! யாரோ ஒரு சோழனேடு — நம் மனம் ஏற்றுக்கொள்ளாத சைவத்தை ஏற்றுக்கொண்டு—ஒப்பந்தம் செய்துகொண்டு, போரிலே வெற்றி காண்பதைவிட—நமது தாயாதியான குலசேகரனேடு சமாதானம் செய்துகொள்வது தவரு அண்ணு?'' என்று சோகத்தோடு செந்தாமரை கேட்டாள்.

அந்தக்கேள்வியைவிட, அவளது கலங்கிய கண்கள் — அவனது கோபத்தை இன்னும் அதிகமாக்கியது.

உறையிலிருந்த வாளை இழுத்து அவளிடம் நீட்டி, நம் தாய் தந்தையரைக் கொன்ற குலசேகரனேடு சமாதானம் என்று உன் வாயால் சொல்வதைவிட உன் கையினலேயே இந்த வாளினல் என்னைக் கொன்றுவிட்டால் உன்னைப் பாவி என்று இந்த உலகம் தூற்ருது செந்தாமரை, தூற்ருது!'' என்று வீரபாண்டியன் ஆத்திரத்தில் வார்த்தைகளைக் கொட்டிய போதிலும் அடுத்த நொடியே அவனது கண்கள் கலங்கின.

[வளரும்]


## கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40, 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன. சிறந்த முறையில் நடந்துவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்.

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி-8

**தாராபுரம்.**

கோவை மாவட்டம்

# “வெறும் பேச்சு சனநாயகம்”

[ முத்து ]

குருச்சேவும் புல்கானினும் ருசியக் குடியரசுக் கூட்டாட்சியின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தகாலம் அது. இருவரும் இங்கிலாந்து நாடு சென்றபோது கெய்ஸ்ட்கல் போன்ற தொழிற்கட்சி முன்னணியினரிடம் பேசிக்கொண்டிருந்தனராம், அவர்களிடையே எளிமையாய்த் தொடங்கிய பேச்சு எரிச்சலூட்டும் வகையில் மாறி, குருச்சேவ், கெயிட்ஸ் கலைப் பார்த்து, “உங்கள் குடியாட்சி முறைக்கும் எங்கள் முறைக்கும் என்னதான் வேறுபாடு? சொல்லுங்கள்!” என்றாராம்.

உடனே கெய்ஸ்ட்கல் பெருமகன், “‘பெரிக்ளசின் ‘இடுகாட்டுப் பேச்சை’ப் படியுங்கள்” என்றாராம் சுடச்சுட.

பெரிக்ளஸ் சொன்னதன் கரு இது தான்:

‘மனத் திண்மைதான் விடுதலையின் வேர்.

விடுதலையே மகிழ்ச்சிப் பெருக்கு’

திண்ணிய நெஞ்சினருக்கேவிடுதலை எளிதில்—விரைவில் கிட்டும் போர்க்களத்தில் வாளெடுப்பது மட்டுமே மனத்திண்மை ஆகிவிடாது, பிரச்சினைகளைப் பல கோணங்களில் நின்று அலசிப் பார்த்து ஆராய்ந்திடவும் மனத் திண்மை வேண்டும்!

“முறைகள் எப்படியோ இருக்கலாம், வாதங்கள் எவ்வளவோ நடக்கலாம். அப்படி மனம்விட்டுப் பேசும் வாதங்கள் நம் செயலுக்குத் தடையாய் அமைவதில்லை; ஆனால் பலருடைய சிந்தனைகளிலிருந்து உருவாகிற வாதங்கள் வழங்கும் அறிவைத் தொகுத்துத் தேக்கிச் செயல் முறைக்குப் பயன்படுத்தாமைதான் நம் தோல்விகளுக்கும், பிற்போக்குக்கும் காரணம்!

இன்று இங்கே இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறுவதே இது தான். பேசுவதற்கு உரிமை கொடுத்துவிட்டோம், இதுவே சனநாயகம் என்று பிதற்றிக்கொள்ளுகிறார்கள். ‘வெறும்’ பேச்சுரிமை மட்டுமே சனநாயகம் என்றால் உலக நாகரிகங்களைப் படித்தவர்கள் கேலி செய்வார்கள்.

‘எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், மாறுபட்ட கருத்துக்களை நீ சொல்லலாம். அப்படிச் சொல்லும் உரிமை உனக்கு இருக்கவேண்டும் என்பதற்காக நான் என் உயிரையும் கொடுக்கத் தயங்கேன்’

என்று உத்தமர் காந்தி சொன்னதாக ‘நம் நாடு’ இதழில் ‘தோழன்’ எழுதியது நினைவுக்கு வருகிறது.

‘வெள்ளையன் காலத்தில் தமக்கு மாறுபட்ட கருத்துக்களை யாரும் சொல்லக் கூடாதென்ற நிலை இருந்தது. எதேச்சாதிகாரம் படைத்த யாருமே, தங்கள் ஆட்சியின் ஆணிவேர்கள் அசைத்துப் பார்க்கப்படுகிறபோது சும்மா இருந்ததாகச் சரித்திரம் இல்லை. லூயியும், ஜார் மன்னனுந்தான் அப்படித் தடை போட்டார்கள் என்றில்லை. சனநாயகத்தின் பேரால் ஆட்சி செய்தவர்களும் அதையேதான் செய்தார்கள்.

கானா போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற அரசியல் போராட்டங்கள் எதை நினைவூட்டுகின்றன. ஏன், பக்கத்திலே உள்ள பாகிஸ்தானத்து அயூப்கான் என்ன செய்தார்?

அவ்வளவு ஏன்? பிரிவினைத் தடைச்சட்டம் என்பது என்னவாம்?

வெறிபிடித்து வெறுப்பூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மத்திய அரசினை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்புவோரை, ‘துட்டர்களோடு ஒட்டிக்கொண்டிருப்பதைவிட தூர விலகுவதுமேல்’ என்றெண்ணி, பிரிந்துபோகிறோம் என்று சொல்லக்கூடும். வாழ்வின் இயல்பு அது. ‘உனக்கு வெறியில் தான் நடந்துகொள்வேன். நாமே அனைத்தும். ஆனால் பிரிந்துபோகவும் விடமாட்டேன்’ என்று சட்டம் பேசுவது எந்த வகை?

தங்கள் ஆட்சி அறைகூவப்படும் பொழுது தாங்கள் பெற்றுவிட்ட இடத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதில் அற்பத்தனம் செய்கிறார்கள், காந்திவழியில் வந்ததாகச் சொல்லி சனநாயகம் பேசும் காங்கிரசுக்காரர்கள் உட்பட,

இவர்கள் தங்களுக்குச் சாதகமான பேச்சுப்பேசமட்டுமே உரிமை அளிக்கிறார்களாம். அதாவது எதிர்த்து வாதிட உரிமை தருகிறார்களாம். ஆனால் அந்த வாதங்களால் விளையும் பலன் என்ன?

சனநாயக முறையின் சிறப்பே, கருத்துக்களை மோதவிட்டு அவற்றின் வெளிப்பாட்டிலே ஒரு நல்ல முடிவினைக் காண்பதில்தான் இருக்கிறது; நான் எடுத்த முடிவு முடிவுதான். நீங்கள் கருத்துச் சொல்லலாம். ஆனால் அவை வெறும் பேச்சுக்களே என்றால் அதைவிட அற்பத்தனம் வேறொன்றும் இல்லை.

நான் நினைத்ததை மட்டும் சொல்வேன். என் கட்சி நினைத்ததை மட்டுமே செய்வேன்—மன்னிக்க—என் கட்சியில் எனக்கு வேண்டியவர்கள் சொல்கிறபடி மட்டுமே செய்வேன்; மற்றவர் கருத்துக்கள் கிள்ளுக்கீரைகள் என்று எண்ணுவது அபத்தம் மட்டுமல்ல ஆணவமும் ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி-சிறப்பு பற்றி ஆயாசப்படும் அவசரக்காரர்கள் இதைக் கொஞ்சம் புரிந்துகொள்ளட்டும்.

கழகத்தைக்கருவாக்கி உருவாக்கி வளர்த்திட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘வெறும் பேச்சு சனநாயகம்’ பேசவில்லை. பத்துப்பேர் பேசிய கருத்துக்களில் ஏற்புடை நல்ல கருத்துக்களை மதிப்புக் கொடுத்து வரவேற்றுச் செயல்படுத்தினார். அதுதான் கட்சி வளர்ச்சிக்கும் — ஆட்சி அமைப்புக்கும் காரணம். தலைவர் தொண்டர்களுக்கு உரிய மதிப்பு அளித்ததாலே தொண்டர்கள் தலைவரை மதித்தார்கள்.

எதிரியின் கருத்தை மதிக்கத் தொடங்குவதில்தான் சனநாயகமே தொடர்குகிறது.

இதோ ஒரு எடுத்துக்காட்டு:

சட்டமன்றத்தில் நிலவரி பற்றி விவாதம் நடைபெற்றபோது ‘காம்பவுண்டிங்’ முறைபற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சுக்கும், மற்றொரு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரின் கருத்துக்கும் மதிப்

பளித்து ஏற்றுக்கொண்டாரே, முதலமைச்சர் அண்ணா அவர்கள். அது சனநாயகம் இல்லாவிட்டால் 20 பேர் அந்தப் பிரச்சினைபற்றி இரண்டு நாட்கள் பேசிப் பயன் என்ன?

விவாதம் நடத்துவதே நல்ல கருத்துக்களை வெளிக்கொண்டு வரவும்-நல்ல முடிவுகளைக் காணவுந்தான்.

அண்மையில் தஞ்சை மாவட்டத்து உழவர் கருத்தரங்கு நடைபெற்ற போது யார்யாரோ பேசினார்கள். அதிகாரிகள் பேசினார்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசினார்கள். காங்கிரசுக்காரர்கள் பேசினார்கள், கழகத்துக்காரர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். கம்யூனிஸ்டு தோழரும் பேசினார்கள்.

'அரிசி உற்பத்தி பெருகவேண்டும்—விலையைக் குறைக்கவேண்டும்'—இதைச் சுற்றிச் சுற்றியே கருத்தரங்கு நடைபெற்றது.

அனைவர் பேச்சுக்களையும் அமைதியாகக் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்த முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஒவ்வொருவர் கருத்துக்கும் உரிய மதிப்பளித்துக் கருத்தரங்கின் விளைவாய்த் தாம் புரிந்துகொண்ட கருத்து ஓட்டத்தைப்பற்றி விளக்கி நடைமுறைக்கு ஒத்தது—ஒவ்வாதது, உடனடியே செய்யத்தக்கது—அல்லாதது பற்றியெல்லாம் பேசி அரசு மட்டத்தில் தாம் செய்ய இயன்ற நடவடிக்கைகள் பற்றி விவரித்தார்

அதுதான் விவாதத்தின்விளைவுகளைப் பொது நன்மைக்குப் பயன்படுத்திக்கொண்ட சிறப்பு!

அதை விடுத்துக் காசைச் செலவழித்துக் கருத்தரங்கைக் கூட்டி, கருத்துக்களைக் காற்றிலேவிட்டுப் பயன் என்ன?

காங்கிரசு ஆட்சியில் நடந்தது அதுதான். பெரிக்ளஸ் சொன்னதும் அதைத்தான்;

'முறைகள் எப்படியோ இருக்கலாம். வாதங்கள் எவ்வளவோ நடக்கலாம். அப்படி மனம் விட்டுப் பேசும் அந்த வாதங்கள் நம் செயலுக்குத் தடையாய் அமைவதில்லை. ஆனால் பலருடைய சிந்தனைகளிலிருந்து உருவாகின்ற வாதங்கள் வழங்கும் அறிவினைத் தொகுத்துத் தேக்கிச் செயல்முறைக்குப் பயன்படுத்தாமைதான் நம்முடைய தோல்விகளுக்கும், பிற்போக்குக்கும் காரணம்!

எவ்வளவு பொருத்தம்!

இந்தியத் துணைக்கண்டத்துக் குழப்பங்களுக்கெல்லாம் இதுவே காரணம்.

மொழிப் பிரச்சினையில் அறிவாளர்களின் கருத்துக்கேற்ப கொஞ்சம் அடக்கத்துடன் நடந்திருந்தால் இந்தக் குழப்பங்கள் ஏன்? சாக்ளாவின் பதவி விலகல் ஏன்?

அதுபோலவே, மாநிலங்களிலும் மத்தியிலும் ஒரே கட்சி ஆண்டு கொண்டிருந்ததாலே சிந்திக்க மறுத்த அகில இந்திய வாலாக்களுக்கு ஐந்தாண்டிக்கு முன்னரே அண்ணா அவர்கள் ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

''காலம் மாறிக்கொண்டிருக்கிறது கருத்துக்கள் மாறி வருகின்றன. ஆளுகின்ற கட்சிகளும் மாறக்கூடும். மத்திய அரசும் மாநில அரசும் வேறு வேறு கட்சிகளின் தன்மையில் அமையும் காலம் வெகுதொலைவில் இல்லை. அப்போது மாநில—மத்திய அரசுகளின் உறவுபற்றி—உரிமைபற்றிச் சிக்கல்கள் வரும். அவைபற்றி இப்போதே சிந்திக்கத் தொடங்குங்கள்'' என்று 1963-ல் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

மொழிப் பிரச்சினையைக் கொஞ்சம் அடக்கத்தோடு—உண்மையோடு அணுகுங்கள். அரசியல் சட்டத்தை மாறிய — புதிய கோணங்களில் இருந்து ஆராயுங்கள், தேவை இருந்தால் அரசியல் சட்டத்தை மாற்றி அமைத்திட ஆராயுங்கள்.'

என்று அறிவாளர்களை—வழக்கறிஞர்களைச் சந்தித்த போதெல்லாம் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அப்போது யார் அந்தக் கருத்தை மதித்தார்கள்?

அரசியல் சட்டத்தை மாற்றச் சொல்லிச் சதி செய்கிறார்—தூண்டிவிடுகிறார் என்று பேச மட்டும் தெரிந்தது. காங்கிரசுக்காரர்களுக்கு. இப்போது பாருங்கள்.

மாநில உரிமைகளில் மத்திய அரசு தலையிடுகிறதென்று காங்கிரசு முதலமைச்சர்களே பேசத்தொடங்கி விட்டார்கள். சென்ற வாரத்தில் புதுடில்லியில் புதுவை முதல்வர் பரூக் மறைக்காயர் பேசியது வேறென்ன? 'தேர்ந்தெடுக்கஉரிமை இருக்கிறபோது, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆள உரிமை இருக்கிறபோது, அதை இன்ன வகையில்—இப்படிச் சிறப்பாகச் செய்வோம் என்று முடிவு செய்யும் உரிமை மட்டும் நம்மிடம் இல்லாமல் மத்திய அரசிடம் ஏன்?' என்று அவர் கொதித்தெழுந்திருக்கிறாரே, அதற்கென்ன பதில்?

கட்சிக் கட்டுப்பாடென்று சொல்லி அவர் வாயை அடைப்பது பெரிய காரியமில்லை; அவர் வாதத்துக்கு பதில் என்ன? ஆக மொத்தம் ஒன்று தெரிகிறது.

எதிரிலே இருப்பவர்கள் 'வெறும் பேச்சு'ப் பேச மட்டும் உரிமை கொடுத்துவிட்டு இதுதான் சனநாயகம் என்று உளறுவதில் அர்த்தமில்லை. அவர்கள் கருத்துகளைக் கவனத்துடன் கேட்டு அவற்றுக்கு உரிய மதிப்பளிப்பதில்தான் சனநாயகத்தின் உயிரே இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் மத்திய அரசினை நடத்துகிற வரையில் இந்தியா உருப்படப் போவதில்லை.

விரைவில் புதிய தொடர்கதை!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

## 'கண்ணாத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

4- பக்கத் தொடர்ச்சி

தில் இருக்கும் காவலற்ற மலர். அந்த மலர் கொடிமலராக இருந்தால் ஒருவேளை பறிக்க நினைப்போரின் கைக்கெட்டாத மலராக இருக்கலாம். அதுதான் வீதியில்போவோர் வருவோரின் கண்களில் பட்டுக்கொண்டே இருக்கிறதே. அந்த எல்லோருடனும் பேசிவிடுவதால் மனம்விட்டு வெள்ளையாகப் பழகுவதால் தொல்லை ஏதும் வந்துவிடாதென்று நினைத்தாள். வயது வந்த பொன்னம்மாளின் அறிவுரைகள் பழமையின் மறுவடிவங்கள் என்றெல்லாம் கேலி பேசி வந்தாள்.

அன்று அந்த செஞ்சி கூட்ரோட்டில் கூடிவிட்ட கூட்டத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. புதுமலர் மலை அடிவாரத்தில் பிணமாகக்கிடந்தாள் என்ற செய்தி அறிந்த அவ்வூர் மக்கள் திரளாகக் கூடி தன்ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். காரணம் யாருக்கும் விளங்காத புதிராகவே இருந்தது.

'என்னய்யா காரணம்?' ஒருவன் கேட்டான். அவள் அறியாதப் பொண்ணு அடக்கவொடுக்கமா இருந்தாள்லே. அவ வந்த நாலு மாசத்திலே இந்த ஊர்லே உள்ள எல்லார்கிட்டேயும் பேசி பழக்கம் வச்சிக்கிட்டா? மனிதன் மனசுஒரேமாதிரியாகவாஇருக்கும்'' கூட்டத்தில் ஒருவர் தன் வெறுப்பை வீசினார்.

''சே.....அப்படியெல்லாம் சொல்லாதேப்பா, பெண்ணு எல்லாரிடமும் பழகறதாலேயே தப்பா நினைக்கிறதா? அந்தப் பெண்ணு எல்லாரிடமும் பழகுமே தவிர ஒருகாலும் தப்பாவே நடக்காதய்யா'' மற்றொருவர் அவள் குணதிசயங்களை விளக்கினார்.


**வாய்வு சூரணம்**
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாயவு, கை கால, இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

**பூபதி எண்ணெ**
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் பனிக் காலங்களில வரும இளைப்பு, மேல் மூச்சு, குணம செய்யவல்லது.
புட்டி ரூ. 7—50

**கக்குவான் மருந்து**
முதல் நாளிலேயே ககருவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக கட்டுப்படுத்தி விரைவில் குணம செயயவலலது.
புட்டி ரூ. 2—00

**வீரகேசரி மாத்திரை**
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும உறுப்புக்கு உறுதியும இழநத சகதியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

**S. V. R. [illegible] K I M P வாய்வுசூரணம் டிப்போ**
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

உப ஏஜெண்டுகள்
அமர்தலால் அண் கோ., 146 நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ. வல்லராம நாடார் அண் சன்ஸ், 188-எ தாராவி ரோடு. பம்பாய்-17.
சொக்கலிங்கம செட்டியார், மருநதுக் கடை திருப்பாபுலியூர், கடலூர் என், டி.
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன.


அட சரிதாய்யா......பெண் தலை நிமிர்ந்து வாழ்வதாலே ஒன்றும் வந்துவிடாதுன்னு சொல்லறதெல்லாம் நடைமுறைக்கு வராத விஷயம். பெண்கள் அடக்கம் ஒடுக்கமாத்தான் இருக்கணும். அதிலேயும் அழகுள்ள பெண்கள் திருமணமாக வேண்டிய பெண்கள் அடக்கமாத்தான் இருக்கணும்.

'இல்லாததய்யா சொன்னுங்க'' பொண்ணு சிரிச்சாப்போச்சு புகையிலை விரிச்சாப் போச்சுன்னு'' என்ருர் மற்ருெருவர்.

'காரணம் என்னுன்னு தெரியாம ஏய்யா குட்டையைக் குழப்பறீங்க. கொஞ்சம் இருங்கய்யா நம்ம ராசமாரி வர்ரான் கேக்கலாம். அவன் ராஜாமலையிலிருந்துதான் வர்ரான்''

'என்னப்பா ஏதாவது தெரிஞ்சுதா?''

''ஒண்ணும் தெரியல்லே. அந்தப் பெண் எல்லோருடனும் பழகியதால் யாரோ கோபாலாம் அவளுடன் பழகும் சக ஊழியர்— அவளை கற்பழிக்க முயன்ருனும். பாவம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவோ முயன்றிருக்கிருள். முடிவு தோல்வி தான். என்ன செய்வாள்? கற்பிழந்து வாழ விரும்பவில்லை. அவள் மரணத்தைத் துணைக்கழைத்துக் கொண்டாள்.''

''அது எப்படிப்பா தெரியும் உனக்கு'' என்ருன் ஒருவன்.

'அவளிடம் ஒரு கடிதம் இருந்ததாம். அதன் மூலமாத்தான் தெரியும்'' என்ருன்.

'முறையோடு புரிந்துகொள்ளாத வரையில்இப்படித்தான். புதுமலரின் போக்கும் நோக்கும் நல்லதுதான் நேர்மையானதும்தான், ஆனுல் அவளைப் புரிந்துகொள்ளுகின்ற உலகம்இன்னும் உருவாகவில்லையேபுது மலர் போன்ற நேர்மையான பெண்களுக்கு இன்றைய உலகம் நிச்சயம் ஒரு வைரியே. அதைப் புரிந்து கொள்ளவேண்டும். வாய்யா போகலாம். நமக்கென்னய்யா?' என்று சொல்லிவிட்டுக் கூட்டத்தைவிட்டு புறப்பட்டான் அந்த ஆள்.

●

# வணிகத் திட்டம்.

''கூவம் ஆற்றுத் திட்டம் எழில் மேவும் ஒரு திட்டம். நம் நாட்டில் இயற்கையாகவே அமைந்துள்ள சிறப்புக்கள் தகுந்த முறையில் கையாளப்பெற்றுல் எழிலும் கிடைக்கும்—பயனும் ஒருசேரக் கிடைக்கும்.

''இந்தத் திட்டத்தோடு இணைந்த பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் அவசரத்தில் சேர்த்த திட்டமல்ல; அது ஒரு வணிகத் திட்டம். இரயிலை விட—மோட்டார் லாரிகளைவிட உள்நாட்டில் படகுகளின் மூலமாகப் பண்டங்களை ஆறுகளில் ஏற்றிவருவதே சிக்கனம் ஆகும்.

''பக்கிங்காம் கால்வாய்த் திட்டம், ஆந்திரத்தையும்—தமிழகத்தையும் வணிகத் துறையில் இணைக்கிற திட்டம்! அந்தச் சாதனம் பாழாகி, பல வருடங்களாகத் தூர் வாரப்படாமல் பயனற்றுக் கிடக்கிறது! முயன்று தூர் அகற்றினுல், 'சென்னைக்கு உள்ளே போக்குவரவுக்குக் கூவம் என்ருல், 'சென்னையையும் — ஆந்திரத்தையும் இணைத்திட பக்கிங்காம் கால்வாய்' என்ற நிலை உருவாகி எழில் குலுங்க இருக்கிறது என்பதோடு, தகுந்த பயனையும் வணிகத் திறனையும் இந்தத் திட்டங்கள் மூலம் பெற இருக்கிறோம்.''



# மத்திய அரசிலிருந்து மாநில அரசா? மாநில அரசுகளிலிருந்து மத்திய அரசா?

[ எஸ். ஆர். ]

வைத்தியர்களிடமும் வழக்கறிஞர்களிடமும் உண்மையை ஒளிக்கக்கூடாது என்பார்கள்.

'பத்திரிகையாளர்களிடமும் அரசியலை ஒளிக்கக்கூடாது' என்பதனை இந்தியப் பிரதமர் உணர்ந்திருப்பதனை அண்மையில் காட்டிக்கொண்டிருக்கிறார்.

'மாநிலங்களின் நிதி—உதவி பற்றிய கோரிக்கைகளில் நியாயமிருக்கிறது. அவை அனைத்தும் தேவையானதே. ஆனால் மத்திய அரசுதான் அவைகளைப் பூர்த்தி செய்யும் நிலைமையில் இல்லை' என்று சென்ற ஞாயிறன்று வட்டார மொழிப் பத்திரிகையாசிரியர்கள் அடங்கிய கூட்டத்தில் பிரதமர் இந்திரா குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்கள் என்று மட்டும் பொதுவாகப் பேசி புரிந்துகொண்ட தன்மையைக் காட்டிக் கொண்டிருப்பதோடு நிற்கவில்லை.

'மாநில அரசுகள் குறிப்பாக காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் நிர்வாகத்துக் கீழ் உள்ள அரசுகள் மத்திய அரசுக்கு பெரிதும் ஒத்துழைக்கின்றன. அவைகளது நிதிப் பற்றுக்குறை கோரிக்கைகளில் உண்மை இருக்கிறது. ஆனாலும் மத்திய அரசு உதவும் நிலையில் இல்லாமல் இருக்கிறது,' என்று குறிப்பிட்டுப் பேசி பாராட்டுக்குரியவராகி இருக்கிறார்.

நிதிப் பிரச்சனைக்காக மட்டுமே இந்திரா இந்த உணர்வினைக் காட்டினாரா அல்லது மத்திய மாநில அரசுகளின் உறவு முறைகளைப் புதிதாக வேணும் தெரிந்துகொண்ட நிலையில் இவ்வாறு பேசினாரா என்பதை இன்னும் சற்றுக் காலம் பொறுத்திருந்துதான் முடிவு செய்ய முடியும்.

ஆனாலும் இதே இந்தியப் பிரதமரும் அவரது துணைப் பிரதமரும் சில கிழமைகளுக்கு முன்னர் 'மாநிலம் என்ன மாநிலம்? மத்திய அரசு இல்லாமலா மாநிலங்கள் வந்துவிட்டன? மத்திய அரசின் முன்னேற்றம்தான் முக்கியம்!' என்ற கருத்தில் பேசியது செய்தி இதழ்களில் பதிவாகி உள்ளது.

அதிலும் சற்றுசிறப்பாக மொரார்ஜி தேசாய் சென்னை வந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில்தான் 'மத்திய அரசின் வளர்ச்சி முக்கியம்' என்று வாதாடிப் பேசினார்.

'மத்திய அரசு வலிவுடையதாக இருந்தால் மாநிலங்கள் தானாகவே வலிவு பெற்றுவிடும்' என்று இந்திரா புதுடில்லியில் தெரிவித்த கருத்து ஒன்றினைப் பாராட்டி பம்பாய் 'ஹிம்மட்' இதழ் விமர்சனம் செய்திருந்தது.

ஆனால் இருவரது கருத்துக்களுக்கும் முன்னரே தமிழக முதலமைச்சர் இதே பிரச்சனையில் தக்கதொரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்.

'மாநிலங்கள் தனித் தனியே வளர்ச்சி பெற்றால் அதுவே இந்தியாவின் மொத்த வளர்ச்சிக்கு வழிகோலும் அதுதான் முறையான முன்னேற்றம்'

என்று திட்டக் கமிஷன் பதவி பெற்று புது டில்லிக்குச் சென்ற வெங்கட்டராமனுக்காக சென்னை ஆபட்ஸ்பரியில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்டார் அண்ணா.

மாற்றுக் கட்சியினர் நிர்வாகத்துக்கு வந்துள்ளதை சாதாரண அரசியல் கண்கொண்டு மட்டும் பார்த்ததனால் ஏற்பட்ட விளைவாகத்தான் மொரார்ஜியும் இந்திராவும் 'மத்திய அரசு இல்லாமலா மாநில அரசுகள்' என்ற அடிப்படைக் கேள்வியைக் கேட்டுவந்தனர்.

இது, தாங்கள் தோல்வியுற்ற மாநிலங்களில் காங்கிரசுக்காரர்களுக்கு ஒரு பிரசார சாதனமாகப் பயன்பட்டது. 'எதற்கெடுத்தாலும் மத்திய அரசின்மீது பழியைப் போடுவதா?' என்று புதுடில்லிக்காகப் பரிந்து வந்து கேள்வி கேட்பதில் பொழுதைப் போக்கினார்.

ஒருவேளை மத்திய அரசிலும் காங்கிரஸ் அல்லாத நிர்வாகம் வந்தால் அப்போது காங்கிரஸ் மாநிலங்கள் பேசும் மத்திய—மாநில வாதம் எப்படியிருக்கும் என்பது கருத்தளிக்கும் கற்பனையாகவே இருக்கிறது.

கொடுத்து உதவுதற்கு நிதி இல்லாததுதான் உண்மைக் காரணம் என்றால் அதற்காக இப்படி கூட்டாட்சித் தத்துவத்துக்கே புதுப் பொருள் அளிக்கும் வகையில் மத்திய அரசிலிருந்துதான் மாநில அரசுகள் என்ற புதிய கருத்தினைக் கிளப்பியிருக்கத் தேவை இல்லை.

இதயத்தில் கட்சி மாச்சரியம் இருந்ததால் ஏற்பட்ட விளைவு மத்திய அரசு பெரிதா மாநில அரசு பெரிதா என்ற வீணான சர்ச்சைக்குச் சென்றிருக்க வேண்டியதில்லை.

'மாநிலங்களின் கோரிக்கைகள் நியாயமானவைதான். குறிப்பாக காங்கிரசல்லாத நிர்வாகத்தில் உள்ள மாநிலங்களின் தேவைகள் கவனிக்கப்பட வேண்டியதுதான். மத்திய அரசு உதவும் நிலைமையில் இருந்தால் நாட்டுக்கே நல்லதுதான் ஆனால் என்ன செய்வது நிதித் தட்டுப்பாடு மொத்தமாக இங்கேயும் இருக்கிறதே''

என்பதனை இந்திரா இப்போது வந்தாவது ஒப்புக்கொண்டமைக்கு பாராட்ட வேண்டியதுதான்.

ஆனால் இந்த ஒப்புதல் பெற வேண்டிய விளம்பரத்தைப் பெற வேண்டும். இதே அறிவிப்பை சலசலப்புக்காட்டாமல் அவர் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் பதிவாக்கி வைக்கட்டும் என்ற மனப்போக்கில் தெரிவித்துள்ளார். ஆனால் ஏனோ அந்த பத்திரிகையாளர்கள் இந்த ஒப்புதலுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கவில்லை,

எதற்கெடுத்தாலும் மத்திய அரசு மீது பழி போடுவதுதான் நிர்வாகமா என்ற ஒரே வாதத்தினை தங்கள் பிரசார சாதனமாக்கிக் கொண்டுள்ள தமிழகக் காங்கிரசார் இந்திரா புதுடில்லியில் தெரிவித்திருக்கும் கருத்துக்களைச் சற்றுக் கவனமாகத் தங்கள் சிந்தனையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது,